# பெரியாழ்வார் திருமொழி 4-2
## அலம்பா வெருட்டா
(திருமாலிருஞ்சோலை மலைச் சிறப்பு)

338 * அலம்பா வெருட்டாக் * கொன்று திரியும் அரக்கரை *
குலம் பாழ் படுத்துக் * குல விளக்காய் நின்ற கோன் மலை **
சிலம்பார்க்க வந்து * தெய்வ மகளிர்கள் ஆடும் சீர் *
சிலம்பாறு பாயும் * தென் திருமாலிருஞ்சோலையே (1)

339 வல்லாளன் தோளும் * வாளரக்கன் முடியும் * தங்கை
பொல்லாத மூக்கும் * போக்குவித்தான் பொருந்தும் மலை **
எல்லா இடத்திலும் * எங்கும் பரந்து பல்லாண்டொலி *
செல்லா நிற்கும் சீர்த் * தென் திருமாலிருஞ்சோலையே (2)

340 தக்கார் மிக்கார்களைச் * சஞ்சலம் செய்யும் சலவரை *
தெக்கா நெறியே போக்குவிக்கும் * செல்வன் பொன்மலை **
எக்காலமும் சென்று * சேவித்திருக்கும் அடியரை *
அக்காநெறியை மாற்றும் * தண் திருமாலிருஞ்சோலையே (3)

341 ஆனாயர் கூடி * அமைத்த விழவை * அமரர் தம்
கோனார்க்கொழியக் * கோவர்த்தனத்துச் செய்தான் மலை **
வானாட்டில் நின்று * மாமலர்க் கற்பகத்தொத்திழி *
தேனாறு பாயும் * தென் திருமாலிருஞ்சோலையே (4)

342 ஒரு வாரணம் * பணி கொண்டவன் பொய்கையில் * கஞ்சன் தன்
ஒரு வாரணம் * உயிர் உண்டவன் சென்றுறையும் மலை **
கரு வாரணம் * தன் பிடி துறந்தோட * கடல்வண்ணன்
திருவாணை கூறத் திரியும் * தண் திருமாலிருஞ்சோலையே (5)

343 ஏவிற்றுச் செய்வான் * ஏன்றெதிர்ந்து வந்த மல்லரை *
சாவத் தகர்த்த * சாந்தணி தோள் சதுரன் மலை **
ஆவத்தனமென்று * அமரர்களும் நன்முனிவரும் *
சேவித்திருக்கும் * தென் திருமாலிருஞ்சோலையே (6)

344 மன்னர் மறுக * மைத்துனன்மார்க்கு ஒரு தேரின் மேல் *
முன்னங்கு நின்று * மோழை எழுவித்தவன் மலை **
கொன்னவில் கூர்வேற்கோன் * நெடுமாறன் தென் கூடற்கோன் *
தென்னன் கொண்டாடும் * தென் திருமாலிருஞ்சோலையே (7)

345 குறுகாத மன்னரைக் கூடு கலக்கி * வெங்கானிடைச்
சிறுகால் நெறியே போக்குவிக்கும் * செல்வன் பொன்மலை **
அறுகால் வரி வண்டுகள் * ஆயிர நாமம் சொல்லி *
சிறுகாலைப் பாடும் * தென் திருமாலிருஞ்சோலையே (8)

346 சிந்தப் புடைத்துச் * செங்குருதி கொண்டு * பூதங்கள்
அந்திப் பலி கொடுத்து * ஆவத்தனம் செய் அப்பன் மலை **
இந்திர கோபங்கள் * எம்பெருமான் கனி வாயொப்பான் *
சிந்தும் புறவில் * தென் திருமாலிருஞ்சோலையே (9)

347 எட்டுத் திசையும் * எண்ணிறந்த பெருந்தேவிமார் *
விட்டு விளங்க * வீற்றிருந்த விமலன் மலை **
பட்டிப் பிடிகள் * பகடுறிஞ்சிச் சென்று மாலை வாய்த் *
தெட்டித் திளைக்கும் * தென் திருமாலிருஞ்சோலையே (10)

348 * மருதப் பொழிலணி * மாலிருஞ்சோலை மலை தன்னை *
கருதி உறைகின்ற * கார்க்கடல் வண்ணன் அம்மான் தன்னை **
விரதம் கொண்டேத்தும் * வில்லிபுத்தூர் விட்டு சித்தன் சொல் *
கருதி உரைப்பவர் * கண்ணன் கழலிணை காண்பர்களே (11)